செ.வெ.எண்: 295 நாள்: 22.05.2021

# மருத்துவகல்லூரி மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்த ராவ் இ. ஆ. ப., அவர்கள் இன்று (22. 5. 2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு மெற்கொண்ட மாவட்டத் தலைவர் திரு. ம. கோவிந்த ராவ் இ. ஆ. ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று இரண்டாவது அலை காரணமாக நோய்த்தொற்று நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எனவே, அரசு பொது ஊரடங்கு அறிவித்துள்ளது. பொதுமக்கள் அதனை நல்ல முறையில் பின்பற்ற வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்கள் சுயக் கட்டுப்பாட்டுடன் அத்தியாவசிய வேலைகளுக்காக மட்டுமே வெளியே வரவேண்டும். அவ்வாறு வெளியே வரும்போது கட்டாயம் முகக்கவசம் அணிந்து இருக்க வேண்டும். இல்லையென்றால் நோய்த்தொற்று மீண்டும் மீண்டும் அதிகரிக்கக்கூடும். தஞ்சாவூர் மாவட்டத்தை பொருத்தவரை நோய்த் தொற்று ஏற்பட்டவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர், மருத்துவர்கள், செவிலியர்கள், அனைத்து பணியாளர்கள் இரவு, பகல் பாராமல் பணியாற்ற தயாராக இருக்கின்றனர்.

இருந்தபோதிலும் சிகிச்சை பெற வருபவர்களுக்கு உடனடியாகதாமதமின்றி, மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து இன்றைக்கு ஆய்வு செய்து கொண்டுள்ளோம். அப்படி வருபவர்களுக்கு தாமதமின்றி மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இருந்தபோதிலும் ஆக்சிஜன் படுக்கை வசதியை அதிகரித்துக்கொண்டே இருந்த போதிலும், கூடுதலான நோயாளிகள் வந்தால் இக்கட்டான சூழ் நிலைக்கு தள்ளப்படுவோம். எனவே பொதுமக்கள் தரப்பிலிருந்து முகக் கவசம் அணிவது சமூக இடைவெளியை பின்பற்றுவது என போதிய ஒத்துழைப்பு தர வேண்டும். ஊரடங்கை அனுசரித்து பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வெளியே வரவேண்டும். தேவை இன்றி வெளியே வரவேண்டாம். அதேபோல் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் கட்டாயம் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தனிமையில் இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்கு நோய்த்தொற்று பரவாத வகையில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

இறுதிச் சடங்குகள், திருமண நிகழ்ச்சிகள் போன்றவற்றில் அரசு அனுமதித்ததை விட அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர். இதனால் நோய்த்தொற்று அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இதுபோன்ற நிகழ்வுகளில் பங்கேற்கும் அனைவருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்படுகிறது. எனவே அதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவோர் அரசின் வழிகாட்டு விதிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

நோய்த்தொற்று நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றால், மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகள் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. எனவே இதனை பொதுமக்கள் நல்ல முறையில் புரிந்து கொண்டு, அரசிற்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் நல்ல முறையில் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் இரவு பகல் பாராமல் பணியாற்றி, கொரோனாத் தொற்றால் உயிர் இழப்பு ஏற்படாத வகையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். இருந்த போதிலும் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டோர் தாமதமாக மருத்துவமனைக்கு வருவதாலும், அவர்களுக்கு இணை நோய் இருப்பதாலும் சில இழப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அவ்வாறு இறப்பவர்களை உரிய முறையில், கொரோனா வழிகாட்டு

விதிமுறைகளின்படி, அவர்கள் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து சடலத்தை ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இறந்தவர்களின் உடல்களை வைக்க பயன்படுத்தப்படும் பை தற்போது கைவசம் 500 இருப்பு உள்ளது. 2000 பைகள் வாங்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

கருப்பு பூஞ்சை நோய்த் தொற்றால், தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 2 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தனியார் மருத்துவமனைகளில் அவ்வாறு பாதிக்கப்பட்ட யாரேனும் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரிக்கு 30 மருத்துவர்கள், 50 செவிலியர்கள் தற்போது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் மற்ற இடங்களில் தேவைக்காக 60 மருத்துவர்கள் 100 செவிலியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நோய்த்தொற்றை கட்டுப்படுத்துவதற்கும் பொதுமக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையிலான மாநில அரசின் வழிகாட்டுதலின்படி மாவட்ட நிர்வாகம் சிறப்பான முறையில் செய்து வருகிறது என மாவட்ட ஆட்சித் கதலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் ஒரு நாள் கொரோனா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், ஆக்சிஜன் படுக்கைகள் மற்றும் ஆக்சிஜன் பயன்பாடுகள் குறித்தும், நோயாளிகளுடன் பார்வையாளர்கள் அனுமதிப்பது குறித்து நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் தனித்தனியே கையில் அடையாள அட்டை விடுவது குறித்து விவாதிக்கப்பட்டது மேலும் வாகனங்கள் முறைப்படுத்துவது குறித்த மருத்துவர்கள் கோரிக்கை வைத்தனர் . அதை அடுத்து பார்வையாளர்கள் வாகனங்களை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வெளியே நிறுத்துவது என்றும் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் வாகனங்களை மட்டும் உள்ளே அனுமதிப்பது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் சிட்டி யூனியன் வங்கி மூலமாக 100 ஆக்சிஜன் அளவிடும் கருவி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மருத்துவமனை நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. தேஷ்முக் சேகர் சஞ்சய் இ. கா. ப., மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. ரவிக்குமார், மருத்துவக்கல்லூரி கண்காணிப்பாளர் மரு. மருது துரை , சுகாதாரத்துறை இணை இயக்குனர் மரு. பாஸ்கரன், சுகாதாரத்துறை துணை இயக்குனர் மரு. நமச்சிவாயம், கோட்டாட்சியர் திருமதி வேலுமணி மற்றும் மருத்துவர்கள் மருத்துவமனை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**